# IN THE COURT OF THE PRINCIPAL DISTRICT JUDGE, KRISHNAGIRI

## O.S. No. 473/2022

**PW.1** is solemnly affirmed on **30.10.2025** in accordance with the provisions of the 1969.

| Name | திரு. சீனிவாசன் | Father Name | |
|---|---|---|---|
| Village | | Taluk | |
| Religion | | Calling | |
| | | Age | |

**முதல் விசாரணை :**

நிரூபண வாக்குமூலம் தாக்கல் செய்கிறேன், அதில் கூறப்பட்டுள்ள விவரங்கள் என்னால் கூறப்பட்டது தான், அதிலுள்ள கையெழுத்து என்னுடையது தான். 15.01.2017 தேதியில் ஏற்பட்ட புரோநோட் அசல் தாக்கல் செய்கிறேன், அந்த முதல் புரோநோட் (A) அது வா.சா.ஆ.1 ஆக குறியிடப்படுகிறது. 15.12.2019 தேதியில் ரூ.25,000/- பணம் கொடுத்து அந்த பாண்டில் பிரதிவாதிகள் மேலொப்பம் செய்துள்ளார்கள், அந்த ஆவணம், வா.சா.ஆ.2 ஆக குறியிடப்படுகிறது. 15.01.2017ல் தேதியிலேயே அதே பிரதிவாதிகள் ரூ.5,00,000/- கடன் வாதியிடம் பெற்றுக்கொண்டுள்ளார்கள், அந்த புரோநோட்டு, அதற்கான ஆவணம் (B) வா.சா.ஆ.3 ஆக குறியிடப்படுகிறது. 15.12.2019ல் ரூ.25,000/- பணம் செலுத்தி பிரதிவாதிகள் மேலொப்பம் செய்துள்ளார்கள், அதற்கான ஆவணம் வா.சா.ஆ.4 ஆக குறியிடப்படுகிறது. 15.01.2017 தாவா புரோ நோட்டு (C) தாக்கல் செய்கிறேன், அது வா.சா.ஆ.5 ஆக குறியிடப்படுகிறது. 15.12.2019 தேதியில் பிரதிவாதிகள் புரோநோட்டில் செல் வைத்தார்கள், அந்த ஆவணம் வா.சா.ஆ.6 ஆக குறியிடப்படுகிறது. 15.01.2017 தேதியில் தாவா (D) புரோநோட் அசல் தாக்கல் செய்கிறேன், அது வா.சா.ஆ.7 ஆக குறியிடப்படுகிறது. அந்த ஆவணத்தில் 15.12.2019ல் ரூ.25,000/- பணம் பிரதிவாதிகள் செலுத்தி செல்

வைத்திருக்கின்றார்கள், அந்த ஆவணம் வா.சா.ஆ.8 ஆக குறியிடப்படுகிறது. 01.09.2021 தேதியில் எனது வழக்கறிஞர் மூலம் பிரதிவாதிகளுக்கு கொடுத்த சட்ட அறிவிப்பு அலுவலக நகல் தாக்கல் செய்கிறேன், அது வா.சா.ஆ.9 ஆக குறியிடப்படுகிறது. அதனை 1வது பிரதிவாதி 03.09.2021 தேதியில் கையெழுத்திட்டு பெற்றுக்கொண்டுள்ளார், அதற்கான அஞ்சலக ஒப்புகை அட்டை வா.சா.ஆ.10 ஆக குறியிடப்படுகிறது. 03.09.2021 தேதியில் 2வது பிரதிவாதி கையெழுத்திட்ட அஞ்சலக ஒப்புதல் அட்டை தாக்கல் செய்கிறேன், அது வா.சா.ஆ.11 ஆக குறியிடப்படுகிறது. தாவா படி தீர்ப்பாக வேண்டுகிறேன்.

Taken down by me in open Court interpreted/read to the witness and acknowledged by him/her to be correct.

LATHA V R Digitally signed by LATHA V R

Principal District Judge,
Krishnagiri.